DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw6

Prosecution Witness : PW7

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சந்திரா | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | வேலுமணி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 24/03/2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் காமாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து எஸ்.வி.பி. மில்லில் வேலை செய்து கொண்டிருந்தேன். தற்போது மூன்று ஆண்டுகளாக நான் வேலைக்கு செல்வதில்லை. நான் கடந்த 12.05.2014 ஆம் தேதி அன்று மதியம் 1.30 மணியளவில் வேலைக்கு செல்லும்போது திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம் ரோட்டில் செம்மடைப்பட்டி பிரிவில் வந்து கொண்டிருந்தபோது வழக்கின் எதிரி மனோஜ்குமார் மகநேந்திரா வேனில் ஆட்களை ஏற்றிக் கொண்டு அதிவேகமாக வந்து கவிழ்ந்துவிட்டது. எதிரி மனோஜ்குமார் ஓட்டிவந்த வண்டியில் நானும், என்னுடன் 15 நபர்களும் இருந்தோம். சம்பவத்தன்று பார்வதி என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். என்னுடன் பயணம் செய்த மற்றவர்களுக்கு கை, கால், கண், தலை, இடுப்பு ஆகிய இடங்களில் அடிப்பட்டு இருந்தது. அதன்பின்னிட்டு என்னையும், என்னுடன் பயணம் செய்தவர்களையும் ஜி.வி.ஜி.மில் மகேந்திரா வண்டியில் ஒட்டன்சத்திரத்தில் உள்ள வேம்பணன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் வேனில் கடைசி சீட்டில் அமர்ந்து இருந்தேன் என்றால் சரிதான். இந்த விபத்து எதன் காரணமாக நடந்தது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த விபத்தின் போது எனக்கு மயக்கம் ஏற்பட்டதா என்றால் இல்லை. வழக்கின் எதிரி

மனோஜ்குமாரை எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் தெரியும். எதிரி மனோஜ்குமாரை வாகனத்தை மெதுவாக ஓட்ட சொன்னீர்களா என்றால் இல்லை. எதிரி மனோஜ்குமார் வண்டியை வேகமாக ஓட்டவில்லை என்றும், மெதுவாகத்தான் ஓட்டினார் என்றும், மனோஜ்குமார் உண்மையிலேயே வண்டியை மெதுவாகத்தான் ஓட்டினார் என்றும், வேகமாக ஓட்டி இருந்தால் நாங்கள் மெதுவாகத்தான் ஓட்ட சொல்லி அறிவுறுத்தி இருப்போம் என்றால் சரிதான். இந்த விபத்து எதானல் நடந்தது என்று எனக்கு தெரியாமலேயே நான் போலீசார் சொல்லிக் கொடுத்து தான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.24 17:45:29 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 24/03/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw7

Prosecution Witness : PW8

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரேவதி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பாண்டி என்ற முருகேசன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 24/03/2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் காமாட்சிபுரம் கோட்டைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஜி.வி.ஜி. மில்லில் வேலைசெய்து வருகிறேன். நான் கடந்த 12.05.2014 ஆம் தேதி அன்று ஆப் நைட் சிப்ட்-க்காக மதியம் 1.30 மணியளவில் ஜி.வி.ஜி. மில் வண்டியில் வேலைக்கு சென்றேன். எதிரி மனோஜ்குமார் ஜி.வி.ஜி.மில் மகேந்திரா வேனை ஓட்டிக் கொண்டு வந்து செம்மடைப்பட்டியில் வேகமாக ஓட்டிவந்து கேதையறும்பு போகும்வழியில் கவிழ்த்திவிட்டார். நடந்த விபத்தில் பார்வதி என்ற பெண் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்து விட்டார். எனக்கும், என்னுடன் பயணித்த 15 நபர்களுக்கும் காயம் ஏற்பட்டு இருந்தது. அதன்பின்னிட்டு எங்களை ஒட்டன்சத்திரத்தில் உள்ள வேம்பணன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். நாங்கள் அங்கு சிகிச்சை பெற்றோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் வேனில் எங்கே உட்கார்ந்து இருந்தேன் என்றால் கடைசி சீட்டுக்கு முன்னாடி சீட்டில் அமர்ந்து இருந்தேன். இந்த விபத்து எந்த காரணத்தினால் நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் வேகமாக ஓட்டிவந்ததன் காரணத்தினால் தான் மற்றபடி டிரைவருக்குத்தான் தெரியும். நாங்கள் யாரும் எதிரி மனோஜ்குமாரை வேகமாக ஓட்ட வேண்டாம் என்று அறிவுறுத்தினோமா என்றால் இல்லை. உண்மையிலேயே மனோஜ்குமார் வேகமாக வண்டியை ஓட்டி இருந்தால் வண்டியில் இருந்த நாங்கள் 15

பேரும் வேனை மெதுவாக ஓட்ட சொல்ல அறிவுறுத்தி இருப்போம் கூச்சல்போட்டு இருப்போம் மேற்படி மனோஜ்குமார் வண்டியை வேகமாக ஓட்டவில்லை என்றால் அவர் வேகமாகத்தான் ஓட்டிவந்தார். போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.24 17:45:36 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 24/03/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate  At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw9

Prosecution Witness : PW9

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஈஸ்வரி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ஈஸ்வரன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :-  24/03/2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர்  எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் காமாட்சிபுரம் கோட்டைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சம்பவத்தின் போது ஜி.வி.ஜி.மில்லில் தான்வேலை செய்து வந்தேன். நானும், என்னுடன் பணிபுரிவர்களும் 1.30 மணி சிப்ட்டுக்கு ஜி.வி.ஜி.மில்லுக்கு சொந்தமான வேனில் வந்தோம். செம்மடைப்பட்டிக்கு அருகே வரும்போது எதிரி மனோஜ்குமார் வேகமாக வண்டியை ஓட்டிவந்து வண்டி கவிழ்ந்துவிட்டது. நான் கடைசி சீட்டில் அமர்ந்து இருந்ததால் என்னை பின்புறம் கண்ணாடியை உடைத்துதான் வெளியே இழுத்தார்கள். அதன்பின்னர் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் என்னை விசாரித்தபோது கண்ணாடியை உடைத்துதான் என்னை வெளியே எடுத்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த விபத்தில் எனக்கு மயக்கம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நாங்கள் எதிரி மனோஜ்குமாரை வண்டியை மெதுவாக ஓட்ட சொன்னோமா என்றால் இல்லை. உண்மையிலேயே எதிரி மனோஜ்குமார் வண்டியை மெதுவாகத்தான் ஓட்டிவந்தார் என்றாலும், வேகமாக ஓட்டிவந்து இருந்தால் நாங்கள் மெதுவாக ஓட்ட சொல்லி அறிவுறுத்தி இருப்போம் என்றால் சரியல்ல. தற்போது விபத்து இழப்பீடு கோரும் வழக்கிற்கு ஆதரவாக இந்த வழக்கில் போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நான்

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.24 17:45:43 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 24/03/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate  At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw10

Prosecution Witness : PW10

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆறுமுகம் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | நாட்ராயன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 24/03/2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் ரெட்டியார்சத்திரத்தில் உள்ள சமத்துவபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது ஜி.வி.ஜி.மில்லில் வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 12.05.2014 ஆம் தேதி மதியம் 1.30 மணியளவில் நான் சமத்துவபுரத்தில் இருந்து வேலைக்கு செல்வதற்காக ஜி.வி.ஜி. மில் மகேந்திரா வேனில் வந்து கொண்டிருந்தேன். வேன் செம்மடைப்பட்டி அருகே வேகமாக வந்து அப்சட் ஆகிவிட்டது. என்னை சக்தி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சொல்வதுபோல் வேன் அதிவேகமாக வரவில்லை என்றால் சரியல்ல, அதிவேகமாகத்தான் வந்தது. தற்சமயம் நான் விபத்து இழப்பீடு கோரும் வழக்கிற்காக போலீசார் சொல்லிக் கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.24 17:45:51 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 24/03/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw11

Prosecution Witness : PW11

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பிரபு | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சுந்தரம்பிள்ளை | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 24/03/2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் ரெட்டியார்சத்திரத்தில் உள்ள சமத்துவபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது ஜி.வி.ஜி.மில்லில் வேலை செய்து வருகிறேன். கடந்த 12.05.2014 ஆம் தேதி அன்று மதியம் 1.30 மணியளவில் நான் சமத்துவபுரத்தில் இருந்து செக்ண்ட் சிப்ட் வேலைக்காக ஜி.வி.ஜி.மில்லுக்கு சொந்தமான மகேந்திரா வேனில் வேலைக்கு செல்வதற்காக வந்தேன். செம்மடைப்பட்டி அருகே கேதையறும்பு ரோடு எதிரி மனோஜ்குமார் வேகமாக ஓட்டிவந்த வேன் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விட்டது.அதன்பின்னர் ஜி.வி.ஜி. மில்லுக்கு சொந்தமான வேறு வண்டியில் என்னை சக்தி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து நடந்த போது விபத்தான வாகனத்தில் சிக்கிக்கொண்ட எங்களை கேதையுறும்பு பிரிவு அருகே உள்ள கடைகள் மற்றும் வீட்டில் இருந்தவர்கள் தான் வந்து எங்களை வாகனத்திற்கு வெளியே வர உதவி செய்தார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரி மனோஜ்குமார் ஓட்டிவந்த வாகனம் வேகமாக வரவில்லைஎன்றால் சரியல்ல, வேகமாகத்தான் வந்தார். தற்சமயம் நான் விபத்து இழப்பீடு கோரும் வழக்கிற்காக போலீசார் சொல்லிக் கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.24 17:45:57 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 24/03/2026